# C.S.I TAMIL CHURCH - OMAN

# "பாலைவன மன்னா"

**அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார். மத்தேயு 1:21**




**மன்னா – 10** டிசம்பர் 2020 **பிரதி – 9**



# ஆயர் மடல்



**"இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" லூக்கா 2:11**

பெத்தலையில் பாலனாய் பிறந்த இரட்சகர் இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

ஆண்டின் கடைசி மாதத்தில் வந்துள்ளோம். இந்த ஆண்டு முழுதும் பல பாடுகள், பெலவீனங்கள், இழப்புக்ள, வேதனைகள், கண்ணீர் அனுபவங்கள் வழியாய் வந்த போதும் நம்மை காத்த கர்த்தரைத் துதிப்போம்.

ஆலயம் திறக்கப்படவில்லையே என்ற ஏக்கம் உங்கள் உள்ளங்களில் இருக்கிறது என்பதை அறிவேன் ஆனால் நமது சபைகமிட்டி பல நிலைகளில் இறை மக்களின் இறை தொழுகைக்காய் எடுத்துவரும் அனைத்து முயற்சிகளுக்கும் உங்கள் அனைவர் சார்பிலும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் கூறுகிறேன். இதன் ஒரு பகுதியாக இம்மாதம் முழுதும் 2021-க்கான நாள்காட்டி, கிறிஸ்து பிறப்பு வாழ்த்துப்பாடல், ஜெபத்தோடு உங்கள் இல்லங்களை ஒரு சிலராக சந்தித்து ஜெபிக்க திட்டமிட்டுள்ளோம். உங்கள் ஆதரவும், ஜெபமும், பங்களிப்புகளும் திருச்சபை வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் தரும். எனவே அதிகமாக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

திருச்சபை கிளைச் சங்க ஆண்டு விழாக்களையும் திட்டமிட்டுள்ளோம். இணைந்து நேரலை நிகழ்ச்சியில் பங்குபெறவும் அன்போடு அழைக்கிறேன்.

2020-க்கான சந்தா பாக்கிகள், மாதாந்திர காணிக்கைகள், மிஷனரி காணிக்கைகள், பிறந்த நாள், திருமணநாள், பொருத்தனை மற்றும் நன்றி காணிக்கைகள் டிசம்பர் மாத இறுதிக்குள் ஆலயத்தில் செலுத்தி ஆலயத்தின் மீது தங்களுக்கு இருக்கும் அன்பை வெளிப்படுத்திட ஆலோசனை கூறுகிறேன்.

பண்டிகை நாட்களில் பய பக்தியோடு பரமனை பணிந்து கொள்ளவும், பகிர்வின் முக்கியத்துவத்தை உணரவும் பாதம் அமர்ந்து பாலனாம் இயேசுவை தரிசிக்கவும் பாரில் பரிசுத்தமாய் வாழவும் இறை ஆற்றல் உங்கள் அனைவரையும் வழி நடத்துவதாக!

அனைவருக்கும போதகர் குடும்பத்தின் சார்பில் கிறிஸ்மஸ் நல் வாழ்த்துக்கள்.

**அன்புடன் போதகர்,**


**Rev. Dr. N. ஜெசின்**

# ஆயர் அருளுரை

ஆண்டவராகிய கிறிஸ்து வழியே உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக!

கிறிஸ்து பிறப்பு பண்டிகை மாதத்துக்குள் கடந்த வந்திருக்கும் உங்களை அன்போடு வாழ்த்துகிறேன். இந்த மாத இதழில் ஆண்டவரின் அன்பு என்னும் தலைப்பில் தியானிக்கின்றோம்.

**“தேவன், தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்” – யோவான் 3:16**




ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, கடவுள் உலகத்தில் அன்பு கூருதல் என்பதாகும். மனுக்குலம் பாவத்தில் அழிந்து போவதை விரும்பாத கடவுள் குமாரனை இவ்வுலகில் காணும் மனுஉருவில் பெத்தலகேமில் பிறக்கச் செய்தார். கிறிஸ்து பிறப்பு பண்டிகையைக் கொண்டாட ஆயத்தப்படும் நாம் எப்படி எல்லாம் பிதாவாகிய கடவுள் நம்மிடம் அன்பு கூர்ந்தார் என்னும் உண்மையை அறிவது நல்லது.

கெட்டுப்போவது ஆண்டவருக்கு பிரியமில்லை. எனவே நித்திய ஜீவனை மனிதன் அடைய வேண்டுமாயின் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு இம்மண்ணில் உருவாக வேண்டும். அவரை விசுவாசித்து அன்பு கூருகிறவனுக்கு நித்திய வாழ்வு உண்டு என்பதை கிறிஸ்து பிறப்பின் செய்தி கூறுகிறது.

**1. புத்திரனைப் போல அன்பு:-**

ஆண்டவரின் அன்பு தந்தை தன் பிள்ளைகளை நேசிப்பதைப் போன்ற அன்பு என திருமறை நமக்கு சுட்டுகிறது. எபிரெயர் 12:6-ல் “கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்.”

அன்பு கூருகிற தகப்பன் சிட்சிக்கிறார், சிட்சிக்கிற தகப்பன் தன்னை கொடுத்து பிள்ளையை மீட்டுக்கொள்ள உறுதியாயிருக்கிறார்.

நம்மை மீட்கும்படி பாரில் வந்த இயேசு கிறிஸ்துவின் அன்பை எப்படி நாம் புரிந்து கொள்வது என்றால்,

1யோவான் 3:16-ல் ‘‘அவர் தம்முடைய ஜீவனை நமக்காக கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்’’.

1யோவான் 3:1-ல் ‘‘நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப் படுவதினாலே பிதாவானவர் நமக்கு பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்.

தம்முடைய சொந்த பிள்ளைகளாக பாவித்து குமாரனாய் மண்ணில் பிறந்து, வளர்ந்து, பாடுகளை அனுபவித்து தன்னுடைய ஜீவனைக் கொடுத்து நம்மை மீட்டுக் கொண்டதால் அன்பு இன்னதென்று அறிய முடிகிறது. இந்த அன்பை புரிந்து கொள்வோம்.

**2. பிழைக்கும்படி அன்பு:-**

‘‘தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும் படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம் மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது’’ 1யோவான் 4:9.

உலகத்தின் பிறப்பில், பாடுகளில், மரணத்தில், அழிவிலிருந்து நாம் பிழைக்கவேண்டும் என்பதுதான் இறை விருப்பமாக உள்ளது. எனவே தம்முடைய ஒரே குமாரனை நாம் பிழைக்கும்படி உலகத்தில் அனுப்பி அன்பு கூர்ந்தர் என்று வேதம் கூறுகிறது.

சிலவேளைகளில் இது நம்முடைய சாமர்த்தியம் என எண்ணுகிறோம். ஆனால் 1யோவான் 4:10-ல் ‘‘நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாரதார பலியாக தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது’’ என்று திருமறை சுட்டிக்காட்டுகிறது. எனவே நம்முடைய அன்பினால் அல்ல, அவர் நம்மீது வைத்த அன்பே உலகில் நம்மை பிழைக்கச் செய்கிறது என்பதுவே உண்மையாகும்.

**3. பரிசுத்தமாக்கும்படி அன்பு:-**

ஆண்டவரின் அன்பு நம்மை பாவமற கழுவி பரிசுத்தமாக்கி உயர்வான இடத்தில் அமரப்பண்ணுகிறது என்பது திருமறை நமக்கு கூறும் உண்மை. திருவெளிப்பாடு 1:6-ம் திருவசனம் இவ்விதமாய் கூறுகிறது,

“நம்மிடத்தில் அன்புகூர்ந்து தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக”

கடவுளுக்கு முன்பாக நாம் ராஜாக்களாக ஆசாரியர்களாக இருக்க வேண்டுமாயின் பாவம் கழுவி பரிசுத்தமாக்கப்படவேண்டும் அதற்காக இயேசு கிறிஸ்து பாலனாய் மண்ணில் பிறந்து மனுமக்களின் பரிசுத்தத்திற்காய் பாடுகளை ஏற்று சிலுவையில் இரத்தம் சிந்தி நம்மை பரிசுத்தப்படுத்தினார்.

இதனால் ஆண்டவரின் பரிசுத்தமாக்கும் அன்பு நம்மில் வெளிப்பட்டது என்பதை அறிந்து கொள்ளுகிறோம்.

ஆண்டவரின் அன்பு நம்மில் பூரணப்படவேண்டும் என விரும்புகிற நமக்கு ஆண்டவர் 1யோவான் 4:12-ல் ஆலோசனை தருகிறார்.

“தேவனை ஒருவரும் ஒரு போதும் கண்டதில்லை. நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார் அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்”

ஆண்டவரின் அன்பு நம்மில் பூரணப்பட நாம் ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்க அழைக்கப்படுகின்றோம். ஆண்டவரின் அன்பில் பூரணப்பட்டவர்களாய் இந்த ஆண்டின் கிறிஸ்து பிறப்பு பண்டிகையில் இணைந்து இயேசு பாலனை தொழுது கொள்ள முயல்வோம். ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**அன்புடன் போதகர்**
**Rev. Dr. N. ஜெசின்**

**Wish you a Happy Christmas!**

Rev. Dr. N. Jesin
Mrs. D. Sharmila
Master. J. Ben Stanes
Miss. J. Beena Sherin



## அன்பே பெரியது

**விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது. 1 கொரிந்தியர் 13:13.**

இது 17-ம் நூற்றாண்டில் அமெரிக்க தேசத்தில் நடந்த உண்மைச்சம்பவம்.



வயதான முதியவர் ஒருவர், ஆற்றின் கரையிலே ஆற்றைக் கடந்து மறுகரைக்கு செல்ல காத்துக் கொண்டிருந்தார். ஆற்றில் இடுப்பு அளவே தண்ணீர் சென்றாலும், அது குளிர் காலமாக இருந்தபடியால் தண்ணீருக்குள் நடந்து செல்ல முடியாது. ஆகவே குதிரையின் மூலமாக மக்கள் மறுகரைக்கு செல்வர். அப்படி குதிரையின் மீது வருபவர்களின் குதிரையில் தானும் ஏறி மறுகரைக்கு சென்று விட யோசித்தவராய் ஆற்றின் கரையில் நின்று கொண்டிருந்தார். குதிரைகளில் பலர் அந்த பாதையில் கடந்து செல்லும்படியாக வந்தனர். குளிரில் நடுங்கிக் கொண்டிருந்த அந்த முதியவரோ யாரிடமும் சென்று உதவி கேட்க்கவில்லை.

கடைசியாக அந்த ஆற்றைக் கடக்க ஒருவர் வந்தார். அவரை உற்று நோக்கிய முதியவர், தன்னை மறுகரையில் சேர்க்கும் படியாக அவரிடம் உதவி கேட்டார். அந்த மனிதன் முதியவரிடம், “நான் கடைசியாக இந்த ஆற்றைக் கடக்க வந்தவன். எனக்கு முன்பாக பலர் இந்த ஆற்றைக் கடந்து சென்று கொண்டிருக்கின்றனர். ஏன் அவர்களிடம் உதவி கேட்கவில்லை. என்னைப் பார்த்தவுடன், நீங்கள் உதவி கேட்டதின் நோக்கம் என்ன?” என்று கேட்டார். அதற்கு அந்த முதியவர், “நான் அவர்களை உற்று நோக்கியபொழுது, அவர்கள் கண்களில் அன்பும் உருக்கமும் தெரியவில்லை. ஆகவே அவர்களிடம் உதவி கேட்பது வீண் என்று எண்ணினேன். ஆனால் உங்களைப் பார்த்த பொழுது உமது கண்களில் அன்பும் உருக்கமும் தெரிந்தது. ஆகவே நீங்கள் நிச்சயமாக எனக்கு உதவி செய்வீர்கள் என்று நிச்சயத்தவனாய்

உம்மிடம் கேட்டேன்" என்றார். அப்போழுது அந்த முதியவரை தனது குதிரையில் ஏற்றி அவரது வீட்டிற்கே சென்று இறக்கிவிட்டார் அந்த மனிதர். பின்னர் குதிரையில் வந்த அந்த நபர், தான் எவ்வளவு அவசரமாக சென்றாலும் தன்னால் இயன்ற அளவிற்கு பிறருக்கு உதவி செய்வதாக தீர்மானம் எடுத்தார். குதிரையில் வந்த அந்த நபராகிய தாமஸ் ஜெபர்சன், பின்னாளில் அமெரிக்க ஜனாதிபதியாக உயர்ந்து, அநேக ஏழை மக்களுக்கு உதவினார்.

இந்த உலகத்தின் மக்கள் நம்மை எவ்வாறு அடையாளம் கண்டு கொள்ள வேண்டும் என்று இயேசு நமக்கு கற்பித்துக் கொடுத்துள்ளார். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள் என்றார் (யோவான் 13:35). ஒரு திருச்சபை விசுவாசிகளுக்கு, வேறு திருச்சபை விசுவாசிகளைப் பிடிக்காது. திருச்சபைகுள்ளேயே ஒரு சிலருக்குள் பிரிவினை காணப்படும். குடும்பத்திற்குள்ளே அன்பு காணப்படாது. கோபம் வந்து சண்டை போடுவார்கள். ஆனால் மன்னிப்பு கேட்கவோ, மன்னிக்கவோ தயங்குவார்கள். வேதம் சொல்கின்றது. அன்பில்லாதவன் தேவனை அறியான், தேவன் அன்பாகவே இருக்கிறார். (1யோவான் 4:8)

**அன்புடன் போதகர்**


## மகளிர் பகுதி

## எல்லா நாமத்திற்கும் மேலான அன்பின் நாமம்

பாலனாய் பிறந்து பாரை மீட்க வந்த இறை இயேசுவின் இனிய நாமத்தில் பெண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பில் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். கிறிஸ்து இயேசுவைக் குறித்து வேதம் இவ்விதமாய் கூறுகிறது. "தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்." (பிலிப்பியர் 2:9-11).

1927-ம் வருடம் ஸ்மித் விகிள்ஸ்வொர்த் (Smith Wigglesworth) என்னும் தேவ ஊழியர், ஒரு திறந்த சந்தைப் பகுதியில் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். அங்கு ஒரு மனிதன் அங்கு இருந்த விளக்கு கம்பத்தின் மேல் சாய்ந்துக் கொண்டு அவர் சொல்வதைக் கேட்டுக்

கொண்டிருந்தான்.




ஸ்மித் தன் பிரசங்கத்தை முடித்து விட்டு, அந்த மனிதனிடம் நேரடியாகச் சென்று, 'என்ன, உங்களுக்கு உடம்பு சரியில்லையா' என்றுக் கேட்டார். அதற்கு அந்த மனிதன் தன் கைகளைக் காட்டினான். அதில் ஒரு கத்தி பளபளத்தது. அவன் சொன்னான், தனக்கு துரோகம் செய்த மனைவியை கொல்வதற்காக தான் போய்க் கொண்டிருந்ததாகவும், அப்போது ஸ்மித் அவர்கள் பேசிக் கொணடிருந்ததைக் கேட்டதாகவும், அவர் இயேசுவின் அன்பைக் குறித்து கேட்டபோது அவருக்கு அந்த இடத்திலிருந்து அசைய முடியாதபடி போனதாகவும் கூறினார். அங்குதானே, இருவரும் முழங்கால்படியிட்டு போவோர் வருவோர் நடுவே அந்த மனிதன் இயேசுவை ஏற்றுக் கொண்டார்.

பின் ஸ்மித் அவரை தன் வீட்டிற்கு அழைத்து சென்று, அவருக்கு வேறு ஆடைகளை கொடுத்து, கொஞ்சம் பணத்தையும் கொடுத்து, அந்த மனிதன் ஒரு வீடு வாங்க உதவி செய்து, அந்த மனிதனை விட்டு வேறு ஒருவனுடன் வாழ்ந்துக் கொண்டிருந்த அவருடைய மனைவியை மன்னித்து, தன்னோடு இருக்க அழைத்தபோது அவளும் வந்து, இருவரும் ஒன்றாக இணைந்ததாகவும், அந்த மனிதர் கர்த்தருடைய ஊழியத்தை வல்லமையாக நிறைவேற்றவும் தேவன் கிருபைச் செய்தார் என்றும் ஸ்மித் தன்னுடைய புத்தகத்தில் எழுதியிருந்தார்.

ஆம் இயேசுவின் நாமத்தில் வல்லமை உண்டு. பில் கேட்ஸ், அம்பானி, லட்சுமி மிட்டால் இவர்களுடைய பெயர்கள் எல்லாம் மிகவும் அறியப்பட்டதாகவும், செல்வாக்குள்ள பெயர்களாகவும், உலகத்தில் பிரசித்திப் பெற்ற பெயர்களாகவும் இருக்கலாம். ஆனால் இயேசுகிறிஸ்துவின் பெயரோ இவர்கள் எல்லாருடைய பெயர்களையும் சேர்த்து உள்ள வல்லமையை விட மிகப் பெரிய வல்லமை உள்ள பெயராகும். அவருடைய பெயர், மனிதனை இரட்சிக்க, அன்பு செலுத்த வல்லதாகவும், ஒரு மனிதனின் எண்ணத்தையும் செயல்களையும் மாற்ற வல்லதாகவும், உடைந்துப் போன குடும்பங்களை சேர்த்து வைக்க வல்லதாகவும், உடைந்த உள்ளத்தை காயம் கட்டுவதாகவும் உள்ள

ஒரே நாமம் இயேசுகிறிஸ்துவின் நாமமே ஆகும். அந்த வல்லமையுள்ள நாமத்தில் தேவன் ‘வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்’ அந்த நாமத்தை உச்சரிக்கும்போதே நமக்குள் அவருடைய அன்பு ஊற்றெடுக்கிறது.

பேய்கள் பறந்தோடும், வியாதிகள் பறந்தோடும், சாபங்கள் பறந்தோடும், பாவங்கள் உருண்டோடும். பிசாசுகள் பயந்தலறி ஓடும். அவருடைய நாமத்தில் யாவருடைய முழங்கால்களும் முடங்கும். இந்த உலகத்தில் அந்த நாமத்திற்கு ஈடு இணையான பெயர் வேறெதுவும் இல்லை. பிசாசு, பாவம்; உலகை ஜெயித்த நாமம் இயேசுவின் நாமமே. தூதர்களும் வணங்கும் நாமம் இயேசுவின் நாமமே. என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன் (யோவான் 14:14) என்று வாக்குதத்தம் செய்தவர் உண்மையுள்ளவராகவே இருக்கிறார். அவருடைய நாமத்தில் கேட்பதெல்லாம் நமக்கு தருவார். நம்மை இரட்சித்த நாமம் இயேசுவின் நாமமே, நம்மை பரலோகத்தில் சேர்க்கும் நாமம் இயேசுவின் நாமமே. இன்றும் அதிசயங்கள், அற்புதங்கள் செய்யும் நாமம் இயேசுவின் நாமமே. மரித்தோரை உயிரோடு எழுப்பும் நாமம் இயேசுவின் நாமமே. மரணப்படுக்கையில் இருக்கும் நோயாளியை சுகப்படுத்தும் நாமம் இயேசுவின் நாமமே. தற்கொலைக்கு நேராக ஓடும் மனிதனை தடுத்து நிறுத்தும் நாமம் இயேசுவின் நாமமே. புது ஜீவனை அவனுக்கு கொடுக்கும் நாமம் இயேசுவின் நாமமே. இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

இத்தனை இனிதான அன்பான நாமமே ஏழைக்கோலமாய் பெத்லகேமில் மனிதனாய் அவதரித்தது. மானிடரை மீட்க மண்ணில் வந்தது. மனுக்குல இரட்சிப்புக்காய் தன்னைக் கொடுத்தது. நம் வாழ்வில் நம்மையே உயர்த்த விரும்பும் நாட்களில் வாழும் நாம், ஆண்டவரை உயர்த்த அவர் நாமத்தை மகிமைப்படுத்த நம்மை அர்ப்பணிப்போம்.

அனைவருக்கும் அன்பின் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்

கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**
**திருமதி D. ஷர்மிளா ஜெசின்**

## ஊனத்தையும் தாண்டி...



மண்ணில் :
விண்ணில் :
நாடு : இங்கிலாந்து
தரிசன பூமி : இந்தியா

சேவை செய்வதற்கு ஊனம் ஒரு தடையேயில்லை ‘மனமிருந்தால் மார்க்கம் உண்டு’ என்பார்கள். ஆம். நமது நல்ல எண்ணங்களும், நல்ல செயல்களுமே பிறர் வாழ்வை உயர்த்தும் உன்னத கருவிகளாகும்.

1887-ஆம் ஆண்டு ஜான் டக்கர் என்ற மிஷனெரி பாளையங்கோட்டையில் பணிபுரிந்து கொண்டிருந்தார். இவர் ஆத்தும அறுவடை வீரர். தன் சொல், செயல் அனைத்திலும் இயேசுவைப் பிறருக்குக் காண்பித்து, மக்களை நற்செய்தியின் பதையில் நலமாக வழிநடத்திக் கொண்டிருந்தார். இவருக்கு ஒரு சகோதரி. பெயர் சாராள் டக்கர். கால் ஊனமுற்றவர். கால் ஊனமே தவிர மனம் ஊனமில்லை.

இவரைச் சுற்றிலும் எப்பொழுதுமே தோழிகள் பட்டாளம் நிறைந்திருக்கும். ஏனெனில் இவர் அன்புடன் பேசம் வார்த்தைகளை அவர்கள் தம்மை மறந்து கேட்டுக் கொண்டிருப்பர். தேன் சொட்டும் வார்த்தைகளுக்குச் சொந்தக்காரர் இவர். கருணையே நிறைந்தவர்.

ஒரு நாள் ஜான் டக்கர் தன் சகோதரிக்கு ஒரு கடிதம் எழுதினார். அக்கடிதத்தில், “தமிழ்நாட்டுப் பெண்கள் கல்வியறிவு இல்லாமல் நாயினும், பேயிலும் மிகவும் இழிவாக நடத்தப்படுகிறார்கள். அவர்களின் அவல நிலையைச் சொல்ல வார்த்தைகளே இல்லை” என்று குறிப்பிட்டிருந்தார். சாராள் டக்கர் இக்கடிதத்தைத் தன் தோழிகளுக்கு வாசித்துக் காட்டினார். தோழிகள் அனைவரும் சாராளின் தீர்மானத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தனர். அனைவரும் முழங்காற்படியிட்டனர். தமிழ்நாட்டுப் பெண்களின் நலனுக்காகத் தங்களை அர்ப்பணித்தனர். தங்கள் வருமானத்தின் பகுதியை இம்மக்களின் நலனுக்காக செலவிட தீர்மானித்தனர். இவர்கள் தீர்மானத்தில் பேரிடி விழுந்தது. அந்தோ! அவ்வருடமே சாராள் டக்கர் இவ்வுலகம் விட்டு விண்ணகம் சென்றார்.

சிநேகிதிகள் கூடினர். அழுவதற்குப் பதில் ஆர்வம் கொண்டனர். 263 பவுன் 17 சில்லிங் பணம் சேர்ந்தது. ஜான் டக்கர் ஐயருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. **‘சாராள் டக்கர்’** ஸ்தாபனம் உருவானது. இன்றும்

திருநெல்வேலியில் அநேக ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும், ஆசிரியர் பயிற்சிப் பள்ளி இதனால் உருவானது.

அன்பரே! கிறிஸ்துவின் பணிக்கு உங்களின் ஊனம் ஒரு தடையாக உள்ளதோ?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:-** உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் – பவுல்

**குயவனின் கரங்களில்:-** ஆண்டவரே! உம்முடைய பணிக்கு என் பொருளையும் கொடுத்து, பிறரையும் கொடுக்கத் தூண்டுதல் செய்வேன்.

**தியானத்திற்கு:- யோபு. 1-2, யோனா.2-3 எபி.8-9**

## நிகழ்வும் பாடமும்

* தாயிடம் நிரூபியுங்கள் கடைசி வரை அன்பாக இருப்பேன் என்று.
* தந்தையிடம் நிரூபியுங்கள் கடைசி வரை உங்கள் பெயரை காப்பாற்றுவேன் என்று.
* மனைவியிடம் நிரூபியுங்கள் கடைசி வரை என் காதல் உனக்கானது மட்டும் என்று.
* சகோதரனிடம் நிரூபியுங்கள் கடைசி வரை உனக்கு உறுதுணையாய் இருப்பேன் என்று.
* சகோதரியிடம் நிரூபியுங்கள் கடைசி வரை உனக்கு செய்யும் சீர் ஒரு சுமையே இல்லை என்று.
* மகனிடம் நிரூபியுங்கள் கடைசி வரை உலகமே எதிர்த்தாலும் நான் உன் பக்கம் என்று
* மகளிடம் நிரூபியுங்கள் கடைசி வரை உன் கண்ணில் நீர் வழிந்தால் என் கண்ணில் ரத்தம் வரும் என்று.

வேறு எவருக்கு நீங்கள் எதை நிரூபித்தாலும் அது கடலில் கொட்டிய பெருங்காயமே.

**தோற்று போனால் வெற்றி கிடைக்குமா?**

- அம்மாவிடம் தோற்று போ, அன்பு அதிகரிக்கும்.
- அப்பாவிடம் தோற்று போ, அறிவு மேம்படும்.
- துணையிடம் தோற்று போ, மகிழ்ச்சி இரட்டிப்பாகும்.

- பிள்ளையிடம் தோற்று போ, பாசம் பன்மடங்காகும்.
- சொந்தங்களிடம் தோற்று போ, உறவு பலப்படும்.
- நண்பனிடம் தோற்று போ, நட்பு உறுதிப்படும்

ஆகவே தோற்று போ, தோற்று போனால் வெற்றி கிடைக்கும்.
அன்புடன் வாழுங்கள். மற்றவரை அன்புடன் வாழ வழி வகுப்போம்.

## அறிய வேண்டியவை

### யார் இந்த சாண்டா கிளாஸ் (Santa Claus)



கிறிஸ்மஸ் நாளில் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் உற்சாகப்படுத்துபவர், சிவப்பு அங்கி அணிந்து பரிசுப் பொருட்கள் மூட்டையுடன் வரும் வெண்தாடி தாத்தாதான். இவரது ஆங்கிலப் பெயர் சாண்டா கிளாஸ். கிறிஸ்து பிறந்த பின்பு 270 வருடத்தில் (15 March 270), அந்த காலத்து ரோம சாம்ராஜ்யத்தில் இருந்த துருக்கியின் பாடாரா பகுதியில் லைசியா (Patara, Lyciay, Turkey) என்ற துறைமுக ஊரில் பிறந்தார் நிகோலாஸ். தனது இளம் வயதில் பெற்றோரை இழந்த நிகோலாஸ் ஏழை மக்களுக்கு உதவுவதே இயேசு அன்பை பிறருக்கு சொல்லும் எளிய முறையாக கருதி அநேக ஏழை மக்களுக்கு உதவி செய்து வாழ்ந்தார். கிறிஸ்துவ இறையியல் பணியை சிறப்பாக செய்த நிகோலாஸ், லைசியா பகுதியின் பிஷப் பதவியை ஏற்றார்.

பிஷப் பதவியில் இருந்த பொழுது, டிசம்பர் 6 தேதி இரவு வந்து கிறிஸ்துமஸ் பரிசுகளை கொடுப்பார். பழங்கள், சாக்லெட்கள், சிறு பொம்மைகள், சிறு பொருட்களை குழந்தைகளுக்கு பரிசாக கொடுப்பார். ரோம் நகர பேரரசன் டயோக்ளீஸ் காலத்தில் கிறிஸ்தவர்கள் வேட்டையாடப் பட்டபோது, பிஷப் நிக்கோலாஸும் சிறையில் தள்ளப்

பட்டார். பின்பு பேரரசர் கான்ஸ்டான்டின் காலத்தில் விடுதலை செய்யப்பட்டு மீண்டும் ஏழை மக்களுக்கு உதவும் பணியை தொடர்ந்து பின்னர் தனது 73-ம் வயதில் (6 December 343) இறைவனடி சேர்ந்தார். அவர் இறந்த பின்னர் அவரது சடலம் துருக்கியில் உள்ள மைரா என்ற இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

மக்களிடம் அவர் காட்டிய கருணை, அன்பின் காரணமாகவும் அவரது தயாள குணம் காரணமாகவும் இன்றளவும் குழந்தைகள் மனதில் வாழ்ந்து வருகின்றார். செயின்ட் நிகோலாஸ் என்பது டச்சு மொழியில் சின்டர்க்களாஸ் என்று மருவியது. பின்னர் ஆங்கிலம் பேசும் மக்கள் அவரை சான்டா கிளாஸ் என அன்புடன் அழைத்தனர். நிகோலாஸ் காலத்தில் பிஷப்புகள் அணிந்திருந்த சிவப்பு வெள்ளை அங்கியே கிறிஸ்துமஸ் தாத்தாவின் உடையாகிவிட்டது. அப்போது முதல் உலகம் முழுவதும் அன்பின் திருவுருமாக கிறிஸ்துமஸ் தாத்தா உலா வருகிறார்.

பதினோரு மாதம் தங்கள் குடும்பத்திற்காக உழைப்பவர்கள், வருடத்தின் இறுதி மாதத்தில் ஏழை மக்களை நினைவிற்கொள்ள வேண்டும். நீ விருந்துபண்ணும்போது ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் அழைப்பாயாக. லூக்கா 14:13. எத்தனை நாள் நாம் விருந்து உணவு சாப்பிட்டிருப்போம். டிசம்பர் மாதத்தில் அனாதை இல்லம் அல்லது முதியோர் இல்லம் சென்று அவர்களோடு ஆறுதலாக பேசி ஒரு நேர உணவை அவர்களுக்கு வழங்கலாமே. நம்மில் அநேகர் கிறிஸ்மஸ் நாளில்தான் அதைச் செய்ய விரும்புகின்றோம். ஒரே நாளில் அநேகர் சென்று அவர்களுக்கு உணவு கொடுப்பதால் அவர்களால் அதை சாப்பிட முடியாமல் வெளியே கொட்டுவார்கள். எனவே அவர்களுக்கு அன்றாடம் தேவைப்படும் சோப்பு, எண்ணெய் போன்ற பொருட்களை வாங்கிக் கொடுக்கலாம். நாம் அவர்களது தேவை அறிந்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். வேதம் சொல்கின்றது. தரித்திரருக்குக் கொடுப்பவன் தாழ்ச்சியடையான்; தன் கண்களை ஏழைகளுக்கு விலக்குகிறவனுக்கோ அநேக சாபங்கள் வரும். (நீதிமொழிகள் 28:27). நமது குழந்தைகளுக்கு நல்ல புத்தாடை அணிவித்து மகிழும் நாம், ஏழைக் குழந்தைகளுக்கும் நம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும்.

ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார் (நீதிமொழிகள் 19:17) ஏழைகளையும் தாழ்ந்தவர்களையும் தரித்திரரையும் அன்போடு விசாரித்து நம்மால் இயன்ற அளவு உதவ வேண்டும். நீங்கள் அவ்வாறு

ஏழை மக்களுக்கு உதவி செய்தால், இயேசு உங்களைப் பார்த்து சொல்லுவார், மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத்தேயு 25:40).

இதை வாசிக்கின்ற நீங்கள் ஒவ்வொருவரும் டிசம்பர் மாத்தில் சாண்டா கிளாஸ் போல எழை மக்களுக்கு உதவ வேண்டும். ஏழைகளை நேசிப்போம், அவர்களுக்கு உதவி செய்வோம் நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உங்களுடைய பலன் மிகுதியாக இருக்கும். இதுவே நீங்கள் கொண்டாடும் உண்மையான கிறிஸ்மஸ்.

கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

## கிறிஸ்மஸ் வாழ்த்து – சபை கமிட்டி




கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ் நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.


கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சி உங்களையும் உங்கள் இருதயங்களையும் முழுமையாக நிரப்புவதாக. எல்லாம் வல்ல இறைவன் மனு அவதாரம் எடுத்து உலகத்தில் இருக்கும் அத்தனை மனிதர்களின் பாவங்களையும், பாடுகளையும் நீக்கும்படியாக தன்னையே பலியாக ஒப்புகொடுக்கும்படி இறங்கி வந்த நன்நாள் இது. இந்த கிறிஸ்மஸ் நாளில் சந்தோஷமும், சமாதானமும், ஆசீர்வாதமும் உங்களையும் உங்கள் இல்லங்களையும் நிரப்ப அன்போடு வாழ்த்துகிறேன். அத்துடன் நமது திருச்சபை போதகர் தலைமையில் சிறப்பாக வழிநடத்தப்பட கர்த்தர் கிருபை செய்துவருகிறார். இறைமக்கள் இம்மட்டும் தந்துவரும் அனைத்து ஆதரவுகளுக்கும், பங்களிப்புகளுக்கும், ஆலோசனைகளுக்கும் நன்றி சொல்லுகிறேன். புதிய ஆண்டிலும் அனைத்து ஒத்துழைப்பும் தர அன்போடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

***கிறிஸ்து பிறப்பு மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!***

**சபை கமிட்டி சார்பில்,**

**Mr. Sujith Gladson**
**சபை செயலர்**

# இறையன்பும் சிலுவையும்




"இறையன்பின் உச்சகட்டம் சிலுவை எனலாம். இறைவனின் அன்பு சிலுவையில் அறையுண்ட இயேசுவின் வழியாக இவ்வுலகிற்கு வெளிப்பட்டது. இறைவன் உலகத்தின் மீது அன்பு வைத்ததற்கு அடையாளம் தம்முடைய ஒரே மைந்தனாகிய இயேசுவைக் கையளிப்பதில் வெளிப்படுகிறது என யோவான் நற்செய்தியாளர் குறிப்பிடுகிறார் (யோவான் 3:16) இந்த இறையன்பு சிலுவையின் வழியாக மனுக்குலத்திற்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. எனவே ஆவியின் கனியில் முதற்கனியாக "அன்பு விளங்குகிறது.

**1. அன்பின் ஆழம் (1 கொரி 13:1-8)**

இறையன்பிற்கு இணையாக இவ்வுலகில் நமக்கு இருக்கும் அடையாளம் சிலுவை மட்டுமே. இச்சிலுவையில் இறைவன் தம்முடைய ஒரே மைந்தனை கையளித்து உலகை பாவத்திலிருந்து மீட்டுக் கொள்கிறார். இந்தக் கைவிடுதல் இறைவன் உலகின் மீது வைத்துள்ள அன்பை வெளிப்படுத்துவதற்கு அடையாளமாக அமைந்துள்ளது. தன் மகனைக் கூட கைவிட்டு மனுக்குலத்தை காப்பாற்ற விளையும் இறையன்பிற்கு இணையாக இவ்வுலகில் எதுவும் இருக்க இயலாது என்பதை விளக்க தூய பவுலடிகளார் முற்படுகிறார் (1கொரி 13:1-8). இறையன்பின் அழத்தை அறிய இயலாது அந்த அன்பை சிலுவை மூலம் உணரலாம். எப்படியெனில் திருப்பணியில் இருக்கின்ற மொழிவரம், தீர்க்கதரிசனம், இறை ரகசியம், விசுவாசம், தருமம், தியாகபலி இவைகளைவிட சிலுவையின் வழியாக வெளிப்படும் இறையன்பு உயர்ந்தது (1 கொரி 13:1-3). இவைகளால் அதன் ஆழத்தை அறிந்து கொள்ள இயலாது. அதே சமயத்தில் அன்பின் ஆழத்தை "நீடிய சாந்தம், தயவு, பொறாமையின்மை, புகழ்சியின்மை உண்மையில் மகிழுதல், சகலத்தையும் தாங்குதல், சகித்தல் (1கொரி 13, 14-17) ஆகியவற்றால் உணரலாம். அந்த அன்பிற்கு இணை சிலுவையே. இந்த சிலுவையின் அன்பை சிந்தனையினால் மட்டும் உணர்ந்து கொள்ளாமல் செயல்களின் வழியேயும் உணர்ந்து கொள்வதே ஆவியின் செயல்பாடாகும்.

### 2. அன்பின் அகலம் (1 கொரி 13:8-9)

சிலுவை அன்பின் அகலம் கிறிஸ்தவ நம்பிக்கையில் முதலிடம் பெறுகிறது. எப்படியெனில் அறிவும் இறைவாக்கும் மொழிகளும் ஒழிந்து போகலாம். காரணம் அவைகளுக்கு எல்லை உண்டு. ஆனால் அன்பிற்கு எல்லையில்லை. குறிப்பாக சிலுவையன்பு எல்லைகளுக்கப்பாற்பட்டது. எனவே பவுலடிகளார் தமது நிருபத்தில் ஆவியின் கனிகளில் முதற்கனியாக அன்பை குறிப்பிடுகிறார். ஆவியின் கனிகளில் வெளிப்படும் அன்பிற்கு எல்லையை வரையறை செய்ய இயலாது. இந்தச் சிலுவை அன்பிலிருந்து தம்மை பிரிக்க இயலாது என்று பவுலடியார் முழங்குகிறார். ஏனெனில் சிலுவை அன்பின் அகலம் அந்த அளவிற்கு ஆற்றல் நிறைந்த ஒன்று. எனவே அந்த அன்பின் அகலத்திற்கு நம்மை உட்படுத்தி சிலுவை தியானங்களை மேற்கொள்ளும் போது நமது விசுவாசம் உறுதிப்படும்.

### 3. அன்பின் ஆட்சி (1 கொரி 13:9-13)

சிலுவை அன்பின் ஆழம் அகலம் அன்பின் ஆட்சிக்கு நம்மை வழிநடத்துகிறது. விசுவாசம், நம்பிக்கை, அன்பு இவற்றில் அன்புதான் பெரியது என பவுலார் குறிப்பிடுகிறார். எப்படியெனில் அன்பின் ஆட்சியினால் விசுவாசமும், நம்பிக்கையும் பெருகும். சிலுவை அன்பின் ஆட்சி மானிட நேயத்தை உருவாக்க உதவுகிறது. சிலுவையன்பின் ஆட்சி ஆன்மீகமானது. அழிவில்லாதது. எங்கும் இறையன்பின் கொடிபறக்கும். இமயம் முதல் குமரிவரையும், கடல் கடந்தும் இறை நம்பிக்கையில் மக்கள் வளருவார்கள். தன்னலங்கள் மறந்து போகும். சமய நம்பிக்கைகள் வலிமை பெறும். சாந்த குணம் உருவாகும். அரசியலிலும் ஆன்மிகத்திலும் நேர்மை உண்டாகும். வருந்துவோருக்கு வாழ்வு பிறக்கும். ஆவியின் கனியினால் மக்கள் மகிழ்ச்சியடைவார்கள்.

**- V. G. மஹிழா ஜெங்கின்ராஜ்**

## வாழ்த்துகிறோம்!

**“இது கர்த்தரால் ஆயிற்று, நாங்கள் மகிழ்ந்திருக்கிறோம்”**



கர்த்தருடைய கிருபையால் ஆகஸ்ட் மாதம் 31-ம் தேதி பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள

**Mr. Sheeju J. & Mrs. Lithika R.**

தம்பதியினரை திருச்சபையாக வாழ்த்துகிறோம்.

# New Arrivals

## "பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"



**Miss. Irena Alice**

**D/o Mr. Daniel Raj. P & Mrs. Anbuselvi Daniel Raj**

**09-10-2020**

**Miss. Livana**

**D/o Mr. Livingston & Mrs. Jeny Sharlin Livingston**

**28-11-2020**

## இந்த மாத முக்கிய நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| 01-12-2020 | செவ்வாய் - அருணோதய ஆராதனை<br>இணையம் வழி நேரலை / நேரம்: காலை 5:00–6:00 |
| 04-12-2020 | வெள்ளி – கிறிஸ்மஸ் கீத ஆராதனை – பாடகர் குழு<br>இணையம் வழி நேரலை / நேரம்: மாலை 5 மணி முதல் |
| 11-12-2020 | வெள்ளி – திருமறை பள்ளி ஆண்டுவிழா ஆராதனை<br>இணையம் வழி நேரலை / நேரம்: மாலை 5 மணி முதல் |
| 18-12-2020 | வெள்ளி-ஆண்கள் ஐக்கிய சங்க ஆண்டுவிழா ஆராதனை<br>இணையம் வழி நேரலை / நேரம்: மாலை 5 மணி முதல் |
| 25-12-2020 | வெள்ளி – கிறிஸ்து பிறப்பு பண்டிகை ஆராதனை<br>இணையம் வழி நேரலை / நேரம்: காலை 5 மணி முதல் |
| 25-12-2020 | வெள்ளி – குடும்ப பாடல் & கிறிஸ்மஸ் மரவிழா<br>இணையம் வழி நேரலை / நேரம்: மாலை 5 மணி முதல் |

## பெண்கள் ஐக்கிய சங்க கிறிஸ்மஸ் வாழ்த்து

அன்புக்குரியவர்களே!




இறை இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். பல இடர்பாடுகள் இவ்வாண்டு நாம் சந்தித்தாலும் திருச்சபை பெண்கள் சங்கத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் நல் ஆலோசனைகளையும காணிக்கைகளையும் அளித்த அனைவருக்கும் நன்றிகளும் பாராட்டுக்களும்.

அனைவருக்கும் கிறிஸ்துபிறப்பு நல்வாழ்த்துக்கள் பெண்கள் சங்கம் சார்பில் கூறுகிறோம்.

**இவண்**
**செயலர் : திருமதி. சாரா ராஜாசிங்,**
**கணக்கர் : திருமதி. ஷைனி ஜோகன்**

## ஆண்கள் ஐக்கிய சங்க கிறிஸ்மஸ் வாழ்த்து

கிறிஸ்துவில் பிரியமானவர்களே!




இறை இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். 2020-ம் ஆண்டில் பல நிலைகளில் ஆண்கள் சங்கத்திற்கு உதவியாயிருந்த, ஆலோசனை தந்த, மிஷனெரிகளை தாங்கின, ஜெபித்த அனைவருக்கும் மனதார நன்றி கூறுகிறேன்.

உங்கள் யாவருக்கும் கிறிஸ்துபிறப்பு நல்வாழ்த்துக்களை ஆண்கள் சங்கத்தின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறோம்.

**இவன்**
**செயலர் : திரு. சைலஸ்**
**கணக்கர் : திரு. ஆஸ்டின் டேனியல்ராஜ்**

## திருமறைப் பள்ளி கிறிஸ்மஸ் வாழ்த்து




ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

இவ்வாண்டு திருமறைப்பள்ளி நேரடியாகவும், இணையம் வாயிலாக நேரலையாகவும் ஒத்துழைப்பு கொடுத்த அனைவருக்கும் நன்றி!

பெற்றோர், ஆசிரியர்கள், பிள்ளைகள், பொறுப்பாளர்கள் அனைவருக்கும் பாராட்டுகளுடன் திருமறைப்பள்ளி சார்பில் கிறிஸ்மஸ் நல்வாழ்துக்கள்.

**இவன்**
**செயலர் : திருமதி. பூபதி பாஸ்கர்,**
**கணக்கர் : திருமதி. பிரியதர்சினி கனகவேல்.**

## பாடகர் குழுவின் கிறிஸ்மஸ் வாழ்த்து

இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்களனைவருக்கும் சபையின் பாடகர் குழு சார்பில் இனிய கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்துக்கள்.

பெரும் நோய் தொற்று காலத்திலும் நம்மை பாதுகாத்த இறைவனுக்கு நன்றியையும் துதிகளையும் ஏறெடுக்கிறேன். இந்த ஆண்டில் நாம் இணைந்து தேவனை ஆராதிக்க முடியாத நாட்களிலும், பாடகர் குழுவாக virtual choir மூலம் இறைவனை மகிமைபடுத்த கிடைத்த தருணத்திற்காக மகிழ்ச்சி அடைகிறேன். இதுவரை மூன்று பாடல்களை நாங்கள் வெளியிட்டுள்ளோம். அதற்கு பெரும் உறுதுணையாக இருந்து செயல்படுத்த உதவிய **திரு. பென்னி மோசஸ்** அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் உற்சாகமாய் virtual choir-ல் பங்குபெற்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

இந்த ஆண்டு பாடகர் குழு உறுப்பினர்கள் **திருமதி. சுமதி ஜோண்ஸ்** மற்றும் **செல்வி. ஜோகன்னா விமல்** அவர்கள் பணி நிறைவு மற்றும் மேற்படிப்பின் காரணமாக தாயகம் சென்றார்கள். அவர்களை வாழ்த்தி பாடகர்குழு சார்பாக நினைவு பரிசு கொடுத்து வழியனுப்ப இறைவன் கிருபை கூர்ந்தார்.

வரும் நாட்களில் நாம் இணைந்து தேவனை நம் பாடல்கள்மூலம் மகிமைபடுத்துவோம்.

**இவண் - பென்சாம் த.**

## பெண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி

### நவம்பர் 2020 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணம் – 1பேதுரு 3:4
2. இச்சையடக்கம் - 2பேதுரு 1:6
3. ஆத்தும ரட்சிப்பு - 1பேதுரு 1:9
4. மனத்தாழ்மை - 1பேதுரு 5:5
5. பன்றி – 2பேதுரு 2:22
6. கர்த்தருடைய நாள் - 2பேதுரு 3:10
7. திருவசனம் - 1பேதுரு 2:3
8. அன்பு - 1பேதுரு 4:8
9. 1000 வருஷம் போல – 2பேதுரு 3:8
10. சத்தியமார்க்கம் - 2பேதுரு 2:2
11. மனுஷருடைய மகிமை 1பேதுரு 1:24
12. மகிமையுள்ள வாடாத கிரீடத்தை - 1பேதுரு 5:4
13. விசுவாசம் - 1பேதுரு 1:7
14. பிலேயாம் - 2பேதுரு 2:15
15. நியாயத்தீர்ப்பு - 1பேதுரு 4:17
16. மாம்ச இச்சைகளை - 1பேதுரு 2:11
17. தீர்க்கதரிசனம் - 2பேதுரு 1:21
18. வெள்ளி, பொன் - 1பேதுரு 1:18
19. மனைவியானவள் - 1பேதுரு 8:7
20. தேவ வசனம் 1பேதுரு – 1:2,3

### நவம்பர் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| Mrs. Anbu Selvi Daniel Raj | Mrs. Josephin Anto Kingston | Mrs. Sapthekha Jerry Sathya |
| Mrs. Ancy Daniel | Mrs. Juslin Jaslin | Mrs. Sarah Rajasingh |
| Mrs. Ashika Joel | Mrs. Leela Gladson | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. Boopathi Baskar | Mrs. Manju Martin | Mrs. Shiney Johan |
| Mrs. Evangelin Yesudhas | Mrs. Mary Praveena Gobinath | Mrs. Sujatha Shalini Jino |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Nisha Rajan | Mrs. Thamari Johnson |
| Mrs. Gracilin Melba Sujin | Mrs. Percy Jean | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Jenshy N. Lenin | Mrs. Priyadarsini Kanagavel | Mrs. Vency Deepa Kannan |
| Mrs. Jeya Rani Victor | Mrs. Pushpa Rani Moorthy | Mrs. Virgin Jegatha Jino |

# ஆண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி

## நவம்பர் 2020 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. ஞானம் – நீதிமொழிகள் 24:7
2. சிநேகிதன் – நீதிமொழிகள் 27:6
3. குணசாலியான ஸ்தீரி – நீதிமொழிகள் 31:10-14)
4. கோபத்தை – நீதிமொழிகள் 21:14
5. இனிய நாவு – நீதிமொழிகள் 25:15
6. விவேகமுள்ள புத்திரன் – நீதிமொழிகள் 28:7
7. தூக்கம் – நீதிமொழிகள் 23:21
8. தன் ஆத்துமாவை – நீதிமொழிகள் 29:24
9. மதியீனம் – நீதிமொழிகள் 22:15
10. குழிமுசல்கள் – நீதிமொழிகள் 30:26
11. கள்ள நாவு – நீதிமொழிகள் 26:28
12. தயையுள்ள போதகம் – நீதிமொழிகள் 31:26
13. பரியாசக்காரன் – நீதிமொழிகள் 21:24
14. தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் – நீதிமொழிகள் 29:18
15. துஷ்டன் – நீதிமொழிகள் 24:8
16. சிங்கம் – நீதிமொழிகள் 30:30
17. கோப முகத்தையும் – நீதிமொழிகள் 25:23
18. குற்றமுள்ளவன் – நீதிமொழிகள் 21:8
19. மகிழ்ச்சி – நீதிமொழிகள் 23:24
20. மதிலிடிந்த பாழான பட்டணம் போலிருக்கிறான் – நீதி. 25:28

## நவம்பர் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| Mr. Alex Baskar | Mr. Jino John | Mr. Prince J. P. |
| Mr. Anu | Mr. Johan Pratheep | Mr. Rajan V. N. |
| Mr. Austin Daniel Raj | Mr. Justus Martin | Mr. Ramesh R. |
| Mr. Daniel Raj P. | Mr. Kanagavel | Mr. Robin Devadhas |
| Mr. Jaslin Sundara Kumar | Mr. Lenin Raj | Mr. Sujith Gladson |
| Mr. Jean C. R. Shibin | | |

*May God Bless All*

## Birthday Celebrants – December 2020

| | |
|---|---|
| 01st December | Mrs. Regin Justa, W/o Mr. Vinolin Vetha Kumar |
| 04th December | Mr. Ramji |
| 05th December | Mr. Sylas |
| 05th December | Miss. N. Renisha, D/o Mr. Nethaji |
| 05th December | Mrs. Borish Shiny, W/o Mr. Rejicilin |
| 06th December | Miss. Febin D. Melbina, D/o Mr. Devaraj |
| 10th December | Mrs. Percy, W/o Mr. Jean C. R. Shibin |
| 12th December | Master. J. S. Jayden Shano, S/o Mr. Jino Retnakumar |
| 13th December | Mr. Jose Chandra Bose |
| 13th December | Mr. Austin Daniel Raj |
| 14th December | Mrs. Thamari, W/o Mr. Johnson Raj |
| 15th December | Master. Joshua, S/o Mr. Kingsly Paul |
| 18th December | Mr. N. A. Srinivas |
| 18th December | Master. Davin Juanito, S/o Mr. Rejicilin |
| 18th December | Mrs. Hema, W/o Mr. Winson |
| 20th December | Miss. Amiga Eliz Augustin, D/o Mr. S.Augustin |
| 20th December | Miss. Winshiya, D/o Mr. Winson |
| 21st December | Mrs. Mary Praveena, W/o Gobinath |
| 21st December | Mrs. Nirmala, W/o Mr. Pusupakaran |
| 21st December | Miss. A. S. Afina Sha, D/o Mr. Ajin |
| 26th December | Mr. Ennesar Jesu Paul |
| 29th December | Miss. Ansina Yelen Augustin, D/o Mr. S. Augustin |
| 29th December | Mr. Mohan Babu |
| 29th December | Mr. Anlin Justin |
| 29th December | Master. Prince Jotham, S/o Mr. Johan Pratheep |
| 31st December | Mr. Ahigen Paul |
| 31st December | Miss. Ancy, W/o Mr. Austin Daniel Raj |

## Wedding Anniversary Celebrants – December 2020

| | |
|---|---|
| 04th December | Mr. M. Sylas & Mrs. Delphin Mary |
| 15th December | Mr. Srinivas & Mrs. Cynthiya |
| 19th December | Mr. Gnana Ruban & Mrs. Maria Tracy |
| 19th December | Mr. Jebastin & Mrs. Sabitha |
| 21st December | Mr. Bejo Nelson & Mrs. Aspin Mercilent Ethel |
| 21st December | Mr. Immanuel Prince & Mrs. Baby Raja Kumari |
| 26th December | Mr. Pratheesh & Mrs. Binita |
| 27th December | Mr. Herbert Goldston & Mrs. Kiruba |
| 27th December | Mr. Vimal Kumar Stephen & Mrs. Esther |
| 28th December | Mr. Deva Raj & Mrs. Vijaya Kumari |
| 28th December | Mr. Jenkin Raj & Mrs. Mahizha |
| 28th December | Mr. Anto Kingston & Mrs. Josephin Jeba Sharmy |
| 28th December | Mr. Jerry Jones & Mrs. Monisha |
| 28th December | Mr. Raja Singh & Mrs. Sarah |
| 29th December | Mr. V. N. Rajan & Mrs. Nisha |
| 29th December | Mr. Dhinakaran & Mrs. Jenelia |
| 29th December | Mr. Rejicilin & Mrs. Borish Shiny |
| 30th December | Mr. David Sundarsing & Mrs. Jancy |

## ஜெபிக்க சில குறிப்புகள்

### திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. போதகருக்காக, குடும்பத்துக்காக, போதகர் விசாவுக்காக, உடல் ஆரோக்கியம், ஊழிய ஆற்றல், உற்சாகமான திருப்பணிகளுக்காக ஜெபிப்போம்.
2. சபை கமிட்டி அங்கத்தினர்களுக்காக, குடும்பத்துக்காக, அவர்கள் பங்களிப்புக்காக, பொறுப்பான ஊழிய செயல்பாடுகளுக்காக ஜெபிப்போம்.

3. அனைத்து கிளை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

- ஓய்வுநாள் பள்ளி
- பெண்கள் ஐக்கிய சங்கம்
- ஆண்கள் ஐக்கிய சங்கம்
- பாடகர் குழு
- ஜெபக் குழு

அனைத்து பொறுப்பாளர்கள், பங்காளர்கள், பங்களிப்புகள், உற்சாகமான செயல்பாடுகள் அதன் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

4. திருச்சபையின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம். ஊழியத் தேவைகள் தடையின்றி இறைமக்களால் சந்திக்கப்பட, இறை ஊழியங்களின் தடைகள் நீங்க பாரத்தோடு ஜெபிப்போம்.

5. திருச்சபை திறக்கப்படவும், திருச்சபை ஆராதனைகளில் ஆண்டவர் பிரசன்னம் அனைவரும் உணரப்படவும், திருச்சபையில் எழுப்புதல் உண்டாகவும் ஜெபிப்போம்.

6. திருச்சபையில் ஒற்றுமையாய் செயல்படுவதன்மூலம் உருவாகும் இறை ஆசி அனைவரும் பெற்றுக்கொள்ளவும், அனைத்து இறைமக்களும் உண்மையான இறைவார்த்தையை உணரவும், எல்லாத் தடைகளையும் தாண்டி ஒருமைப்பாடு ஏற்படுவதன் மூலம் திருச்சபை இன்னும் கட்டி எழுப்பப்படவேண்டும் என பாரத்தோடும் ஜெபிப்போம்.

## மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. நமது திருச்சபையால் தாங்கப்பட்டுவரும் 11 மிஷனெரிகளுக்காக, அவர்கள் குடும்பங்களுக்காகவும், அவர்கள் பாதுகாப்பிற்காகவும், நல்வாழ்வுக்காகவும் ஜெபிப்போம்.

2. மிஷனெரிகளின் பணித்தளங்களுக்காக, பணித்தளத்தில் செய்யப்படும் ஊழியங்களுக்காக, ஊழியக்களத்தில் அநேக ஆத்துமாக்கள் அறுவடைச் செய்யப்பட மன்றாடுவோம்.

3. மலை நாடுகளில் செய்யப்படும் திருப்பணிகளுக்காக, வடநாடுகளில் நற்செய்தி பணி செய்வோருக்காக, ஆண்டவரை அறியாத முரட்டாட்டமான மக்கள் மத்தியில் இறைபணி செய்வோருக்காக மன்றாடுவோம்.

4. பணித்தளங்களின் தேவைகள் அரசாலும், நிறுவனங்களாலும், மக்களாலும் தாங்கப்பட ஜெபிப்போம்.

5. மக்களின் மனமாற்றத்திற்காகவும், இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டு மனந்திரும்ப பாரத்தோடு வேண்டுதல் செய்வோம். எதிர்ப்புகள் மாறவும், எதிராளிகள் மனந்திரும்பவும், எழுப்புதல் உண்டாகவும் மன்றாடுவோம்.

## ஓமான் தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. ஓமான் தேசத்திற்காக, தேசத்தின் ராஜாவுக்காக, தேசத்தின் மக்களுக்காக, தேசத்தின் ஷேமத்திற்காக ஜெபிப்போம்.

2. பொருளாதார வீழ்ச்சியிலிருந்து விடுபட்டு மக்கள் வேலைவாய்ப்புகள் பெருகவும், நிறுவனங்கள் சிறப்பாய் செயல்படவும், பாதிப்புகள் மாறவும் மக்கள் வாழ்வாதாரங்கள் பெருகவும் மன்றாடுவோம்.

3. பணியாளர் குறைப்பு, ஊதிய குறைப்பு, பணிநேர குறைப்பு போன்றவை மாற்றமடைந்து பொருளாதார செழிப்பு ஏற்பட்டு மக்கள் வாழ்வு ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

4. கொடிய வியாதிகள், கொடிய விபத்துக்கள், புதிய சட்டத்திட்டங்கள், தேசத்தின் மாற்றங்கள் வாழ்வு தேடி வந்துள்ள மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தாதபடி மக்கள் அனைவரும் இறைபாதுகாப்பு பெற்றுக்கொள்ள வேண்டுதல் செய்வோம்.

5. தேசத்தின் காலநிலை மாற்றங்கள், சூழ்நிலை மாற்றங்கள் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாதபடி இறைஅன்பை உணர மன்றாடுவோம்.

## இந்திய தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. சுதந்திரம் பெற்று 74-ம் ஆண்டை சந்திக்கும் நாட்களில் அரசியலில், சமூகத்தில், சமயத்தில், வாழ்வில், குடும்பங்களில் உண்மையான சுதந்திரம் உருவாக ஜெபிப்போம்.

2. அனைத்து தலைவர்களுக்காக, அதிகாரிகளுக்காக, ஆட்சியாளர்களுக்காக, பணியாளர்களுக்காக, மன்றாடுவோம். அனைவரும் சேவை மனப்பான்மையோடு தங்கள் பணிகளை மேற்க்கொள்ள ஜெபிப்போம்.

3. மது, லஞ்சம், ஊழல், கொலை, கொள்ளை, விபத்துக்கள், தற்கொலைகள், கடத்தல்கள் தேசத்தைவிட்டு நீங்கவும், மக்கள் சமாதானமாக வாழவும் மன்றாடுவோம்.

4. பொருளாதார வீழ்ச்சி, வேலையின்மை, கடன்பிரச்சனை, கொடிய வியாதிகள், இயற்கையின் அழிவுகளிலிருந்து தேசம் காக்கப்படும்படியாய் வேண்டுதல் செய்வோம்.

5. பாகிஸ்தான், சீனா, நேபாள எல்லைப்பகுதிகளின் பாதுகாப்புக்காகவும், எல்லை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளுக்காகவும் மன்றாடுவோம். நாடுகளுக்கிடையே நல்லிணக்கம் ஏற்பட்டு சமாதானத்தின் தேசமாய் இந்திய தேசம் திகழ ஜெபிப்போம்.

## குடும்பத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. குடும்ப சமாதானத்திற்காகவும், குடும்பங்களின் நல்வாழ்வுக்காகவும், குடும்பங்களின் பாதுகாப்புக்காகவும், குடும்பங்களின் ஆசீர்வாதத்துக்காகவும் ஜெபிப்போம்.

2. கடன்பிரச்சனை, வேலையின்மை, பொருளாதார நெருக்கடி, வறுமை நிலை, இல்லக் கட்டுமான பணி தோய்வு, சம்பள இழப்புகள், விசா பிரச்சனைகள், வழக்குகள் நீங்கும்படியாய் ஜெபிப்போம்.

3. சிறுபிள்ளைகள் காக்கப்படவும், வாலிப பிள்ளைகள் கல்விக்காகவும், உயர்கல்வி, திருமணம், வேலைவாய்ப்புகள் பெற்றுக்கொள்ளவும் கடவுள் பயத்தோடும், இறை ஆசியோடும் வாழ மன்றாடுவோம்.

4. வாழ்க்கைத்துணை, குடும்ப அங்கத்தினர்கள், சகோதர, சகோதரிகள், பெற்றோர், பிள்ளைகள் நல்வாழ்வு பெறவும், குடும்பமாய் இறை நாமத்தை மகிமைப்படுத்தவும் மன்றாடுவோம்.

5. குழந்தை வேண்டியிருப்போர், குழந்தை பேற்றிற்காக காத்திருப்போர், நெடுந்தூரம் பயணப்படுவோர், கடினமான பணிகளைச் செய்வோர், தனிமையிலிருப்போர், வியாதியிலிருப்போர், சிறையிருப்பிலுள்ளோர் விடுதலையையும், இறை ஆற்றலையும் பெற்றுக்கொள்ள மன்றாடுவோம்.

# சிறப்பு இறைவேண்டல்

அன்புடையீர்,

உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் மிகப்பெரியத் துன்பம் கொரோனா என்னும் வைரஸ். இந்தக் கொடியக் கொள்ளைநோய் பலரின் வாழ்வை அழித்துள்ள நிலையில், உலகமே இந்த வைரஸின் துன்பத்தை எண்ணி அச்சமுடன் உள்ளது. இந்தத் துன்பம் அடியோடு அகலவும் மக்கள் அமைதியுடனும், நலமுடன் வாழவும் அனைவரும் தங்கள் இல்லங்களில் குடும்பமாகக் கூடி உபவாசத்துடன் இறைவேண்டல் செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**இறைவேண்டல் குறிப்புகள்:-**

1. கொரோனா வைரஸின் வீரியம் செயல் இழந்து முழுமையாக அழிக்கப்படவும்.....
2. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளோர் முழுமையான விடுதலை பெறவும்.....
3. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் குறித்த பயம் அகன்றிடவும்......
4. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் பரவாமலிருக்கவும், அதற்கு மக்கள் முழுமையான ஆதரவு கொடுக்கவும்......
5. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் குறித்த விழிப்புணர்வுகள், முயற்சிகள் முழுமையான பலனைத் தரவும்......
6. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சரிவிலிருந்து நாடுகள் மீண்டுவரவும்......
7. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய்க்கு எதிராக அரசு மேற்க்கொள்ளும் முயற்சிகள் வாய்க்கவும்......
8. மருத்துவமனையில் பணிசெய்கிற ஊழியர்களுக்காகவும் (Doctors, Nurses மற்றும் அனைத்து உதவி பணியாளர்களுக்காகவும்) மற்றும் சுகாதர துறையில் பணிசெய்கிற அனைத்து பணியாளர்களுக்காகவும்...
9. இந்தியா தேசத்திலும் நாம் வாழுகின்ற ஓமான் தேசத்திலும் இந்த வைரஸ் வேகமாக பரவிவருகிறது. அதன் வீரியம் குறைந்து தேசத்தின் அனைத்து மக்களும் பாதுகாக்கப்படவும்....
10. குடும்பமாக வீட்டில் இருக்கிற நாட்களில் கர்த்தரை அதிகமாக தேடவும், தேவ சமாதானம் குடும்பத்தை ஆளுகை செய்யவும்....

**இணைந்து மன்றாடுவோம்! இனிய வாழ்வு பெறுவோம்!!**

# அனுதின மன்னா – டிசம்பர் 2020

ஒவ்வொரு நாளும் வாசிக்கிறதற்காக ஒரு திருமறைப்பகுதி ஒவ்வொரு நாளுக்கும் தரப்பட்டுள்ளது, வாசித்து தியானித்து பயனடையுங்கள். குடும்ப ஜெபத்திற்கு இந்த பகுதியை பயன்படுத்துங்கள்.

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| டிசம்பர் 1 | செவ்வாய் | சங். 119:121-128 | சங். 119:125 | 2கொரி. 7-9 |
| டிசம்பர் 2 | புதன் | பிலி. 3:12-21 | பிலி. 3:20 | 2கொரி. 10-11 |
| டிசம்பர் 3 | வியாழன் | தீத்து 2:9-15 | தீத்து 2:13 | 2கொரி. 12-13 |
| **டிசம்பர் 4** | **வெள்ளி** | **யோவான் 1:1-14** | **யோவான் 1:14** | **கலா. 1-2** |
| டிசம்பர் 5 | சனி | லூக்கா 2:1-16 | லூக்கா 2:14 | கலா. 3-4 |
| டிசம்பர் 6 | ஞாயிறு | சங். 119:105-112 | சங். 119:105 | கலா. 5-6 |
| டிசம்பர் 7 | திங்கள் | சங். 19:1-14 | சங். 19:7 | எபேசியர் 1-2 |
| டிசம்பர் 8 | செவ்வாய் | சங். 119:97-104 | சங். 119:103 | எபேசியர் 3-4 |
| டிசம்பர் 9 | புதன் | சங். 147:1-20 | சங். 147:15 | எபேசியர் 5-6 |
| டிசம்பர் 10 | வியாழன் | லூக்கா 4:31-37 | லூக்கா 4:36 | பிலிப்பியர் 1-4 |
| **டிசம்பர் 11** | **வெள்ளி** | **எபிரெயர் 4:1-16** | **எபிரெயர் 4:12** | **கொலோ. 1-4** |
| டிசம்பர் 12 | சனி | ரோமர் 10:1-13 | ரோமர் 10:8 | 1தெச. 1-3 |
| டிசம்பர் 13 | ஞாயிறு | செப். 8:14-20 | செப். 8:17 | 1தெச. 4-5 |
| டிசம்பர் 14 | திங்கள் | சங்கீதம் : 20 | சங்கீதம் 20:5 | 2தெச. 1-3 |
| டிசம்பர் 15 | செவ்வாய் | சங்கீதம் : 27 | சங்கீதம் 27:11 | 1தீமோ. 1-6 |
| டிசம்பர் 16 | புதன் | லூக்கா 1:67-80 | லூக்கா 1:77 | 1தீமோ. 1-4 |
| டிசம்பர் 17 | வியாழன் | எபிரெயர். 5:1-14 | எபி. 5:9,10 | தீத்து, பிலமோன் |
| **டிசம்பர் 18** | **வெள்ளி** | **அப். 16:13-18** | **அப். 16:17** | **எபிரெயர் 1-4** |
| டிசம்பர் 19 | சனி | மத்தேயு 1:18-22 | மத். 1:21 | எபிரெயர் 5-7 |
| டிசம்பர் 20 | ஞாயிறு | சகரியா 2:6-13 | சகரியா 2:10 | எபிரெயர் 8-10 |
| டிசம்பர் 21 | திங்கள் | லூக்கா 1:57-66 | லூக்கா 1:58 | எபிரெயர் 11-13 |
| டிசம்பர் 22 | செவ்வாய் | லூக்கா 1:26-38 | லூக்கா 1:30 | யாக்கோபு 1-5 |

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| டிசம்பர் 23 | புதன் | மத்தேயு 1:23-25 | மத்தேயு 1:23 | 1பேதுரு 1-5 |
| டிசம்பர் 24 | வியாழன் | யோவான் 1:1-14 | யோவான் 1:4 | 2பேதுரு 1-3 |
| **டிசம்பர் 25** | **வெள்ளி** | **லூக்கா 2:1-14** | **லூக்கா 2:14** | **1யோவான் 1-5** |
| டிசம்பர் 26 | சனி | ஏசாயா 9:1-7 | ஏசாயா 9:7(b) | 2யோவான் |
| டிசம்பர் 27 | ஞாயிறு | சங்கீதம் : 128 | சங். : 128:2 | 3யோவான் |
| டிசம்பர் 28 | திங்கள் | யோசு. 24:14-22 | யோசு.24:15(b) | யூதா |
| டிசம்பர் 29 | செவ்வாய் | லூக்கா 10:1-9 | லூக்கா 10:5 | வெளி. 1-3 |
| டிசம்பர் 30 | புதன் | எபேசியர் 3:13-21 | எபேசியர் 3:14 | வெளி. 4-7 |
| டிசம்பர் 31 | வியாழன் | சங்கீதம் : 100 | சங். : 100:4 | நன்றி ஜெபம் |
| **ஜனவரி 1** | **வெள்ளி** | **எசே. 36:8-11** | **எசே. 36:9** | **ஆதி 1-3** |

**வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்!**

# HAPPY CHRISTMAS TO YOU ALL



# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்


**Contact: Rev. Dr. N. Jesin**

**GSM : 9693 3489**

**Land Line : 2470 5784**

**E-mail : csitco@gmail.com**

**www.csitamilchurchoman.org**



**(For Private Circulation Only)**